**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **52**

| | | | |
|---|---|---|---|
| Name: | புனமாலை | Caste: | |
| Father'sName : | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A4,A7, A9 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.04.2023

நான் தற்போது இலத்தூர், சுண்டங்கட்டுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலைக்கு செல்கிறேன். சண்முகம் மகன் கிருஷ்ணன் என்பவரை தெரியும் நானும் அவரும் ஒன்றாக வேலை செய்து வருகிறோம். என்னை போலீசார் விசாரிக்கவில்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் கணக்கபிள்ளை வலசையில் இருந்து இலத்தூர் வரும் வழியில் சீலநல்லூருக்கு மேற்கே போலீஸ் அதிகாரி ஒருவர் நாங்கள் வேலைபார்த்துவிட்டு வரும்போது எங்களை நிறுத்தி விசாரித்தார்கள். அவர்கள் வைத்திருந்த ஆவணத்தில் கையெழுத்துபோடும் படி கூறினார்கள். அங்கு போலீசாரை தவிர வேறு யாரும் இல்லை. சக்திப்பாண்டியன், குமார்

தேவர் மற்றும் சொர்ணத்தேவர் மற்றும் அவர் நண்பர்கள் யாரையும் எனக்கு தெரியாது. இசக்கிதேவர் மகன் இசக்கி முத்து என்ற கேபிள் முத்து என்ற நபரை யாரென்று எனக்கு தெரியாது. என் முன்பாக போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை எந்த பொருளையும் எடுத்து கைப்பற்ற வில்லை. நானும் எந்த பொருளையும் பார்க்கவில்லை. இசக்கி முத்து என்ற கேபிள் முத்து என்வவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் முதல் கையொப்பம் கிருஷ்ணனுடையதுதான். , என்னுடன் கிருஷ்ணன் கையெழுத்திட்டார். இரண்டாவது உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ. 8 ஆகும். அதன் பின்னர் தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான் அது அ.சா.ஆ. 9 ஆகும்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

27.08.2007 அன்று கணக்கபிள்ளை வலசையில் நின்றுகொண்டிருந்தபோது சேரன்மாதேவி துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கின் எதிரியான தென்காசி மலையான தெரு இசக்கிமுத்து என்ற கேபிள் முத்துவை கைது செய்து விசாரித்தார் என்றும் அவர் எந்த வித துன்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் ஹனிபா அப்துல்லா ஆகியோரை பற்றியும் அவர்கள் மீது சக்திப்பாண்டியன் வகையறா விரோதம் கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி இசக்கி முத்து, இந்து முன்னணியில் அதிக ஈடுபாடு உள்ளவர் என்றும் குமார் பாண்டியனை கொலை செய்த முஸ்லீம்களை பதிலுக்கு கொலை செய்ய வேண்டும் என்று குமார் பாண்டியன் தம்பி செந்தில் சொன்ன திட்டதின் படி 14.08.2007 ம்

தேதி காலை 10-1/4 மணிக்கு தென்காசி கூலக்கடை பஜாரில் உள்ள முத்து டீக்கடைபக்கம் மறைத்து வைத்திருந்த அரிவாளுடன் செந்திலுக்கு வேண்டியவர்களுடன் நின்றபோது குமார் பாண்டியனை கொலை செய்த ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா மற்றும் அவனுக்கு வேண்டியவர்களுடன் இரண்டு ஆட்டோவிலும், பைக்கிலும் ஹனிபா தம்பி அலாவுதீனும் கையெழுத்து போட்டுவிட்டுகிழக்காக வந்தவர்களை எங்களை தாண்டி போனதும் மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் நுழைந்தவுடன் ஏற்கனேவ எதிர்பார்த்து அம்பாசிடர்காருடன் நின்ற செந்தில் பார்ட்டி காரை வைத்து முன்னால் சென்ற அலாவுதீன் பைக்கில் மோதிவிட்டு வெட்டுங்கள் என்று சப்தம் போடவும் ஆட்டோவில் வந்தவர்களை அலாவுதினும் மேற்கு பார்த்து ஓடிவந்தார்கள் எனவும் உடனே மேற்கே முத்து டீக்கடை பக்கம் நின்ற நாங்கள் அவர்களை வழிமறித்து ஆள் ஆளுக்கு வெட்டினோம் எனவும் நான் என் கையில் வைத்திருந்த அரிவாளால் அலாவுதின் தலையின் பின்புறம் வெட்டினேன் என்றும் மீரான் மைதீன் வலது மார்பில் வெட்டினார் என்று கூறினார் என்றும் அவர்கள் வெட்டியதும் அவர்களும் பதிலுக்கு வெட்ட ஆரம்பித்ததும் நம்ம மேலயும் வெட்டு விழும் என்று வந்துவிட்டதாகவும் கூறினார் என்றும் அப்போது சம்பவத்தில் பயன்படுத்திய அரிவாளை சுப்பிரமணியபுரம் இரயில்வே பாலம் அருகில் செடி மறைவில் வைத்துவிட்டு புனலூருக்கு சென்றுவிட்டதாகவும், இப்போது ஊருக்கு வந்தபோது கைது செய்து விட்டதாகவும் கூறினார் என்றும் பின்னர் அவன் சொன்னதன்படி 18.00 மணிக்கு சுப்பிரமணியபுரம் இரயில்வேபாலம் பக்கம் அத்தாட்சி தயார் செய்து அரிவாளையும் கைப்பற்றினார்கள் என்றும் நானும் எங்கள் ஊர் புனமாலையும் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன்

என்றால் சரியல்ல. சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார் என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக வேண்டுமென்றே பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**